சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு,
வடக்கு மாகாணம்
සෞඛ්‍ය, දේශීය වෛද්‍ය සහ පරිවාස හා ළමාරක්ෂක සේවා අමාත්‍යාංශය,
උතුරු පළාත
MINISTRY OF HEALTH, INDIGENOUS MEDICINE AND PROBATION & CHILD CARE SERVICES,
NORTHERN PROVINCE

சுகாதார கிராமம்,
பண்ணை, யாழ்ப்பாணம்

සෞඛ්‍ය ගම,
පන්නයි, යාපනය

Health Village,
Pannai, Jaffna.

எனது இல. / මගේ අංකය / My No. NP/04/01/Cad/Cir/2022
உமது இல. / ඔබේ අංකය / Your No.
திகதி / දිනය / Date 30/08/2022

மாகாண சுகாதார அமைச்சு சுற்றறிக்கை 01/2022

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சகல மாவட்ட பொதுவைத்தியசாலை பணிப்பாளர்கள்
வடமாகாணம்.

**வைத்தியசாலை மேற்பார்வையாளர்களை PL-03 சம்பளத்திற்கு உள்ளீர்ப்பு செய்தல்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/D/Gen/02/04 இலக்க 25/03/2019ம் திகதிய கடிதத்திற்கமைவான உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் PL/6/2/වවධ இலக்க 08/04/2019ம் திகதிய கடிதம் மூலம் வைத்தியசாலை மேற்பார்வையாளர்கள் பதவிக்கான சம்பளக்கட்டமைப்பை PL-02 விலிருந்து PL-03 இற்கு மாற்றியமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

01. மேற்படி அனுமதிக்கமைவாக 01/01/2021 இலிருந்து செயற்படும் வண்ணம் இவ்வுத்தியோகத்தர்களுக்கு PL-03 சம்பள அளவுத்திட்டம் அனுமதிக்கப்பட்டுகின்றது. அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016இன் படி இதற்கான சம்பள அளவுத்திட்டம் ரூபா.25,790-10x270-10x300-10x330-12x350-38,990 ஆகும். சம்பளம் வழங்கும்போது அச்சுற்றுநிருபத்தின் விதிகள் கவனத்தில்கொள்ளப்படல்வேண்டும்.

| தரம் | சம்பளப்படிநிலை | ஆரம்ப சம்பளம் |
|---|---|---|
| III | ஆரம்ப படி நிலை | ரூபா. 25,790.00 |
| II | 12 ம் படி நிலை | ரூபா. 28,790.00 |
| I | 22 ம் படி நிலை | ரூபா. 31,820.00 |
| விசேட | 32 ம் படி நிலை | ரூபா. 35,140.00 |

02. 01/01/2021இல் தற்போது PL-02-2016 சம்பள அளவுத்திட்டத்தில் III, II, I, மற்றும் விசேட தரத்தில் சம்பளம் பெறுகின்ற வைத்தியசாலை மேற்பார்வையாளர்கள் முறையே PL-03-2016 சம்பள அளவுத்திட்டத்தின் III, II, I, மற்றும் விசேட தரங்களுக்கு தாபன விதிக்கோவை அத்தியாயம் VII, பிரிவு 4 இற்கு அமைவாக உரிய சம்பளத்தில் அமர்த்தப்படுவார்கள்.

03. இச்சம்பள மாற்றத்தின் காரணத்தினால் உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றத்திகதிகள் மாற்றமடையாது. மேலும் சம்பள மாற்றம் செய்யும்போது உத்தியோகத்தர்கள் இறுதியாக பெற்ற சம்பளப்படியானது புதிய சம்பள திட்டத்தில் சமமாக இருப்பின் தாபன விதிக்கோவை அத்தியாயம் VII, பிரிவு 4.4 இற்கமைய அடுத்த சம்பளப்படிநிலை வழங்கப்படலாகாது.

04. வைத்தியசாலை மேற்பார்வையாளர்களின் PL-03-2016 சம்பள குறியீட்டிற்குரிய புதிய ஆட்சேர்ப்புத்திட்டம்/ சேவை பிரமாண குறிப்பு உரிய காலத்தில் மாற்றம் செய்யப்பட்டு அறியத்தரப்படும்.

ச.மோ
திருமதி.ச.மோகநாதன்
செயலாளர்

திருமதி. ச. மோகநாதன்
செயலாளர்
சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை
சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு
வடக்கு மாகாணம்

பிரதிகள் :

1. செயலாளர், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.
2. செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
3. செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்.
4. பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வடமாகாணம்.
5. பிரதிப் பிரதம செயலாளர் - ஆளணியும் பயிற்சியும், வடமாகாணம்.




➤ General: 021 222 0807
➤ Fax: 021 222 0806
Web: www.npchealth.org
Email: mhealthnpc@gmail.com

➤ Secretary : 021 222 0800
➤ Seinior Asst. Secretary : 021 222 0809
➤ Asst.Secretary : 021 222 0804
➤ A.O : 021 222 0803

➤ Director Planning : 021 222 0802
Email: npmhplanning@gmail.com

➤ Cheif Accountant: 021 222 0801
Email: accmohnp@gmail.com